ஞானப் பாட்டு.

ப.வ. அ(ரு)ணாசல முதலியார்.

1931.



உ

ஓம் தத்ஸத்

# ஞானப் பிராது.

இஃது

நாமக்கல் பாவோடி தெருவு

வெங்கிடாசல முதலியார் குமாரன்

வெ. அருணாசல முதலியாரால்

குளித்தலை விவேகபானு பிராஞ்சு அச்சாபீசில்

பதிப்பிக்கப்பட்டது.

1931

4-JAN

R
N31
225068

உ

வேலுமயிலுந்துணை.

## சாற்றுக்கவி.

விருத்தாசலம் வழக்கறிஞர் குமாஸ்தா மகா-ா-ா-ஸ்ரீ
**சோமசுந்தர முதலியார் அவர்கள் இயற்றியது.**

பொய்வழக்கை யாடுதற்கே மனம்பொருந்தி மிகவருந்திப் புலம்பு இன்றூர், மெய்வழக்கையாடுதற்கு முறையறியா தலைகின்றூர் என்னே என்னே! பொய்வழக்கை யாடுதலால் பொருள்போகும் பக்கமுளார் பகையுஞ்சேரும், மெய்வழக்கை யாடுமுறை நவிலுமிந்த நூல்பயிலத் தெளிவீர் தானே.

ஓம் தத்ஸத்.

## முகவுரை.

அன்பார்ந்த ஐயா!

இந்த ஞானப்பிராது என்னும் நூலானது ஓர் பெரியோரால் எழுதி என்னிடம் கொடுக்கப்பட்டு இதை அச்சிட்டு வெளியிடும்படி கோரியதாலும், இன்னூல் மனிதனுடைய சரீரப் பாகுபாடுகளையும் தத்துவார்த்தங்களையும் முத்தி அடையும் மார்க்கங்களையும், ஜீவன் ஈசனைநோக்கி முறையிடும்பாவனையாகவும் நன்கு தெளிவுபடுத்தி இருப்பதால் யாவரும் தத்வார்த்த இலக்கியங்களைத் தனது சரீரமயமாகப் பாவித்து அருத்தசாரத்தை கைக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன்.

அருணாஜலம்.

R N31
4- JAN
225068

ஓம் தத்ஸத்.

# ஞானப் பிராது.

362
181.48 [1]

## விநாயகர் வணக்கம்.

வெண்டா மரையானும் மிளிர்துளபத் தாரானும்
தண்டாமரைப் பதத்தைத் தான்பணிந்து - கொண்டாடு
முன்னவா வேழ முகத்தாயிந் நூலுரைக்கத்
தன்மைசேர் நின்னருளைத் தா.

## முருகன் துதி.

முன்னிருந்து காப்பதற்கு மூலமுதலாதாரம்
தன்னை யறிவதற்கு தாழ்வுண்டோ - நின்னருளால்
ஆதியந்தமில்லா தரும்பொருளைப் பாடுதற்கு
சோதிவடி வேலன் துணை.

---

ஓம்.

அகண்ட பரிபூரண சச்சிதாநந்தமென்னும் பரப்பிரம்ம சந்நிதானத்தில், உன்னதமான ஜகதலமெங்கும் ஜீவகாருண்யம் பொருந்திய, சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியபதவி நேசபூஜித விசிதாஞ்சித முத்தமிழ் ஞானபக்தர்கள் தமக்கு நித்தியமான முத்தியைத் தருகின்ற, மும்மதில் மண்டப முகப்பு சிங்கார கொலுமணி மேடையில் வீற்றிரானின்ற எமது மௌன குரு தேசிகராகிய சின்மயானந்தம் பிள்ளை திவ்யநற் சமுகத்திற்கு :—

அண்ட-ஷு பிண்ட-ஸ்ரீ 1008-உ காயாபுரிஜில்லா மாயாபுரி தாலூகா, சுக்கில சுரோணிதம் பிர்க்கா, குண்டமாகாணம்

கருவூர் சப்டிஸ்டிரிக்டைச் சேர்ந்த ஆரூரிலிருக்கும் ஆத்ம... குமாரன் ஆண்ஜாதி சிவமதம் வித்யா ஜீவனமுள்ள மதுரா... கம் மிகுந்த வணக்கமாய் எழுதிக்கொண்ட ஞானப்பிராது வாக்க பிடிஷன் என்னவென்றால் :—

இப்பவும் காயாபுரி என்னும் பட்டணத்தில், தாயாரென்னும் அவள் கர்ப்பத்தில், நாம் சேயாகி வந்த கட்டடத்தில் பரவிய தொகை வரலாறு :— “எட்டுத்தூண் ஒருவிட்ட போதிகை ஆரண்டுமுட்டிய முட்டுக்காலுடன் முட்டுப்பலகைகளிட்டு பதிந்திடும் வட்டத்திருகாணி வரிச்சல் 32. ஓங்கியசிங்கார மோட்டு வளையுடன் அருகுவளை கூட்டி வரிந்திடும் ஆக்கைக்கயறு எழுபத்தீராயிரம், சேர்ந்திடுங் கொடுங்கை நேர்த்தியான காலாணி கொண்டு ஒருமேலாணி பூட்டிய கைமரம் நாலு, கோர்வையிலுண்டான பார்வையின் விலாசம் ஆறுவது தெருவீதியில் பன்னிரண்டாவது மத்தியில் நான்காவது புகைபோக்கில் 337-வது முடக்கு சந்தில் தென்புற ஓடையில் வடபுறவாடையில் நடுமனை மேடையில் 16-வது கதவிலக்கமுள்ள வீட்டுக் குடிசினில் ஈட்டுப்பத்திர வாடகையாக நான் குடியிருந்து தற்காலம் வாசஞ்செய்யாநின்ற, ரவிகுல சந்திரராஜன் நடைவழிச் சாலைக்கடுத்த பரிமள சுகந்த வர்க்கப்பதியினில் உகந்தெடுத்த திரிபுரானந்த தேவஸ்தானத்திலிருக்கும் சித்திர பூமதில் வஜ்ரக்கோட்டையில் ஆரணமான காரணமேவிய முச்சந்தி வீதியில் தச்சருகந்த அச்சுபதிந்த சித்திரவேலை உச்சிதமான திருக்கோயில் மாடமாளிகை கூடகோபுர நீடுமாகிய சுழிமுனை வட்டத்தில் ஒளிவெளியான அருவிமலைநடு 1000 கால் மண்டபத்தில் அங்காசனத்திலிருந்து சிங்காசனம்பெற்று அருளையடுத்து இருளைவிலக்கி, பொருளைப் படைத்து துளிரை வளைத்து தெவிட்டாத கனியையுண்டு தாங்

மல் தூங்குகின்ற சொர்னமணி ஊஞ்சலிலே பாங்சாய்ப்படுத்திருந்த பரமசுக காணியிலே அனுபோகமாக ஆண்டுவருகிற பூர்வீக பிதுரார்ஜித பரம்பரையில் ஒருவாறு சம்மர்கமான எழுவகைத் தோற்றம் நால்வகை யோனியில் உற்பவித்திரானின்ற எல்லைப்பொழி தகராருன வழக்குத் தொடங்கிய விபரமாவதுயாதெனில் :—

ஆதிமூலம்பிள்ளை அரண்மனை வாசலுக்கு மேற்கு, சசிவம்பிள்ளை சந்நிதானத்துக்கு கிழக்கு, ரவிநாதம்பிள்ளை இந்திரவிமானத்திற்கு தெற்கு, சோமசுந்தரம் பிள்ளை சுத்தக்கட்டுமனைக்கு வடக்கு, இந்த நான்கெல்லைக்குட்பட்ட நிலம் கிழமேல் அளவுகோல் எட்டு, தென்வடல் அளவுகோல்நாலு கட்டுக்கிசைந்த கூட்டுக்குழி தொண்ணூத்தாறுக்கு ஏகபோக நஞ்சை உற்பனதோட்டம் எட்டு, அதன் கர்ப்பனை தோட்டம் பதினாறு, அஸ்திமுட்டு ஆரண்யத் தோட்டம் 520, கிஸ்துகட்டும் கிராமத் தோட்டம் கோடி மூன்றரை, கூல் ஏழு, திடல் 32 உள்ள நிலங்களுக்கு நடைநீர் பாய்ச்சலான ஓர் ஏரியுண்டு. அவ்வேரிக்கு மதகொன்று, நீர்க்குமிழி இரண்டு, கால்வாய்க்கள் எட்டு, மடைவாய்க்கால் பதினாறு, வடிவாய்க்கால் ஒன்பது, வரிவிதநீருணி கம்பத்து தாது ஏழு, தகலை பதினாறு, நத்தம் புறம்போக்கான கழிவு குட்டை இரண்டு, இன்னும் இதைச்சேர்ந்த மாவடை மரவடை முதலான யிடைத்தரிசுகளை அன்னகோலம் பதிந்து ஆகாரத் தீர்வை செலுத்திவருகிற நிலத்தை எருக்கலந்துழுது சேடையாக்கிப் பரம்படித்து ஜலம்விட்டு வித்து இரண்டு விளைவித்துவரும் காலத்தில் டிஷ்ட்ரிக் பிரதிவாதி கருவூர் சப்டிஸ்ட்ரிக்டை சேர்ந்த மும்மலப்பாளையத்திலிருக்கும் கோவிந்தராஜன் குமாரன் க்ஷத்திரிய ஜாதி விஷ்ணுமதம் விவசாய ஜீவனமுள்ள காம

225068



ராஜன் 1, கும்புகோணம் குரோதபட்டன் 2, லுத்தகுண லோபதடியன் 3, முள்ளிக்குடி மோகமுனியன் 4, தாலயப்பேட்டை துஷ்டமதத்தன் 5, மங்கலக்குட்டை மாச்சரியக்கோனன் 6, இந்திரியச்சேரி இடும்பைக்கூத்தன் 7, அப்புக்கேணி ஆங்காரப்பாடி 8, தாட்டிகத்துடன் கோஷ்டிகள் செய்கிற ஐம்புலவேடர்கள் 5, வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்றகன்மககாரர் 5, காயாம்பட்டி கருவிக்கள்வர் எழுபத்தெட்டு ஆகத்தொண்ணூற்றறுவரும் கூட்டமாகக் கூடிக்கொண்டு முன்னுரைத்த காயாபுரிக் கோட்டையை தங்கள் தங்களில் ஆளுதற்கு சாத்தியப்படாமல் அசாத்தியமென்று சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் என்கிற சேவகரை விடுத்து என்னைப்பிடித்துக் கட்டியடித்து அனியாயம் செய்ததுமன்னியில் கரும்புவில்லில் அரும்புகணைத் தொடுத்து அடங்காத ஆங்காரத்துடன் என்மார்பில் புஷ்பபாணத்தை விட்டெறிந்தான். அவன் விட்டெறிந்த மாத்திரத்தில் விசைகொண்டெறிந்த பம்பரம்போல் கிறுகிறுவென சுழன்று மதிமயங்கி அந்தகாரமாகிய சம்சாரக்கடலில் வீழ்ந்து கரையேற வழிதெரியாத குருடனைப்போல் அங்கே சற்றுநேரம் தங்கியிருந்து ... ... ... ஜாக்கிர சொப்பன சுழுத்தியை சொல்லவென்றுலோ திகில் பிடிக்கிறது.

அப்படியிருக்குஞ் சமயத்தில் துரியமுங் கடந்து துரியாதீதத்திற்சென்று நினைந்ததுமற்று நினையாததுமற்று நிர்த்தொந்தமான வனந்தனில் வந்து தன்னந்தனியான சமாதிநிஷ்டைக்கநுகூலமான கருணாகர கிருபாகர சற்குண போதகக்காரராகிய வடிவேல் அரசன் ஓடிவந்து முகத்தோடணைத்து முத்தமிட்டு அப்பா மகனே அறிவுள்ளவனே பேரின்பங் கண்டோர்க்கு வேறின்பமுண்டோ வென்று அவர் உபதேசித்த அன்பின்

வழியே அக்கரையேறி முக்கனிதந்த சற்குருநாதன்தனையறிந்து
இனம்புரிந்து அங்கம் பரவசமடைந்து ஆனந்தக் கண்ணீர்சொ
ரிய கொத்துச்சரவடம் முத்துச்சரப்பளி குண்டலிவட்டக்
குடைமேல் அரசாண்ட கூடஸ்தம்பத்தி லுதித்த நிர்மல
நிராமய நிராதார நிர்விஷய நிஷ்களானந்த சுயம்பு வஸ்துவை
கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் ஆயினும் சுருதியுக்தி
சுவாநுபவத்தில் எழுந்து அரிய சூஸ்திரப்பூட்டை சாஸ்திரத்
திறவுகோலால் திறந்து உள்ளுணர்ந்து பார்க்கையில் வேதாந்த
சித்தாந்த நாதாந்தமும் கடந்த ஓமென்னும் பிரணவ
மூலத்தில் ஒலிக்காநின்று ஓங்கார கம்பத்தைப் பிடித்து காலை
எழுப்பி மூல உலைக்குகையில் ரேசக பூரக கும்பகத்தில் ஊதின
பிகில் சத்தம் மேல் எழும்பி கீழ்முழங்கி அங்கும் இங்கும் எங்
கும் ஓடுதற்குவழியில்லாமல் தத்தித்ததும்பி தத்தளித்துதிடீரெ
ன்று சாயாபுரிக்கோட்டைக்கதிபதியாகிய அங்கராஜன் செவியில்
விழுந்து செவிடுபட்டு சோத்துப்பட்டாளத்துடன் காற்றுத்தம்
பூரடிக்கிற கூச்சலை அதிசீக்கிரமாக எச்சரித்தான். அங்குள்ள
துன்மந்திரி முதலான காவலாளிகள் திடுக்கிட்டுப் பயந்து நடுக்
குற்றுமுன்று காளாஞ்சிக்காரனைக் கூப்பிட்டு யுத்தப்பேர்க்கள
ரணபேரிகை வாத்தியம் முழங்கச் செய்து சிகப்புக்கொடி பாவ
ட்டாவுடன் சதுரங்க சேனைசூழ ரதகஜ துரகபதாதிகளுடன்
புஜபல பராக்கிரமசாலிகளான ஆயுதபாணிகள் அணிநெருங்கி
படைகுலுக்கி உக்கிர கோதண்ட சக்ரவாளுடன் கோட்டைவா
சல் ஒன்பதையும் வளைத்துக்கொண்டு அஷ்டமதமென்னும்
யானைக்கூட்டத்தை விடுத்து மாணிக்கம், மரகதம், வஜ்ஜிரவைடூ
ரியம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், பவளம் இழைத்த கதவு
ஜன்னல்களை உடைத்துத் திறந்து அதிலிருந்த தற்பரானந்த
சைதன்ய மாசூல்களை கொள்ளையடிக்கும்படி கலகம் செய்யத்

தொடங்கினார்கள். இதுதெரிந்து அந்தர சூக்ஷத்தில் சுந்தரம் பொருந்திய ஆதாரமாறும் சேதாரமில்லாத லலாட மத்தியில் பிராணலாயத்தில் கட்டியிருக்கும் பன்னிருவாசிக் குதிரைமேலேறி நேசத்துடன் எட்டு சவுக்காலடித்து சவாரி செய்தவேகம் மயிர்ப்பாலத்தில் நெருப்பாறு தாவிய மையத்திருவீட்டுக்குள் புகுந்து கருத்தைத் திருத்தி தருத்தியாலமூத்தி கவனமுற்றுதிய லகிரிமீறி கிகிரிக்கேறி காலாக்கினிதன்னில் மூலாக்கினிதிரி கொளுத்தி உதயகிரி உச்சி சிகரத்திலிருக்கும் கச்சித்திருவருளா கம்மாயிலேற்றி யிருக்கிற 21600 சுவாச பீரங்கிவெடியைக் கொளுத்தின சத்தம் கோடையிடிபோல் கிடுகிடுவென கர்ச்சித்து பளீரென்று பகைவருடைய கூட்டங்களில் விழுந்து தகிதகித்து திகுதிகுத்து நிலைகுலைந்து பதறி சிதறி கொடுமுடி கணவாயின் வழியாய் ஓட்டம்பிடிக்க ஆரம்பித்தார்கள்.

அப்போது விசித்திரமான வெண்கொடி விசிறி வேண்டிக் கொள்ளும் சமாதானமாகும் கேள்வியாவதெப்படி என்றால் எழுபத்திராயிரம் தந்தித்தபாலோடிய சமாசாரத்தில் அற்புதமான நற்பதந்தந்த அகாரவிந்து உகாரநாத சிகார ரஹசிய வகார வசீகரம் பொருந்தி ஆரூர் நகரத்திலிருக்கும் என்சொந்தமான மூலாதார சுவாதிஷ்டான மணிபூரக அனாகத விசுத்தி ஆக்ஞை சக்கரப்படி என்பேரில் தயவுசெய்து சிவஞான பூசைக்கு இமையளவு நேரம் அனைவரும் நீங்கள் ஒப்புவுற்று இருக்கவேண்டும் என்று கேட்டதற்கு அவர்கள் ஒப்பந்தமில்லாதவராய் வாதபித்த சிலேட்டும தொந்த நிர்ப்பந்தமாகிய 4448-வது விண்ணப்பம் வாசித்த விளம்பரத்தைக் கேட்டவுடன் துவாத சாந்த கபால வரை திறந்து தாரையிரண்டில் சன்னல் பின்னலான சங்கடக் குகைமருந்து பற்றிக்கொண்டு எரிந்து மண்டலமூன்றும் ஊடுருவிப்பாய்ந்து சடசூனிய கேஸரிமார்க்க கெவுன குளிகையில் திரி

லோக சஞ்சார கிரிமேரு பிரதக்ஷிணஞ் செய்து வருகிற வழியில்
வாசிபதி புக்கி நாசியிடைசிக்கி வசித்தமருவழியில் ஒருமொழி
சிறந்து குருமொழி நினைந்து இருவிழி சிவந்து ம[illegible]மொழி மற
ந்து சொர்க்க மத்திய பாதாள லோக துருவபத பருவமதில்,
[illegible]ருவத்தில் புருவமத்தியில் தூண்டா மணிவிளக்குச்சோதியிலே
எப்போதும் தாண்டவங்களாடும் தன்மயத்தில் துவிதமற கலைக்
கின்ற நிரதிசயானந்த அருட்பிரகாஸ தரிசனஞ்செய்து வருகிற
போது அடியேன் முக்கட்டு சந்தில் இக்கட்டுப்பட்ட கஷ்டங்கஷ்
டத்தை சொல்லுகிற தெப்படியென்றால் இவையெல்லாம் மௌன
[illegible]ாகிலையினாலன்றி மற்றொன்றினால் அறியக்கூடாதென்று மே
லோர்களாகிய ஞானநூலாசிரியர்கள் உள்ளக்களிப்புடன் சொல்
லாமல் சொல்லுகின்ற துறையை நிந்தித்தோர் கோடிக்கொன்று
விட்டகுறை உண்டானால் தொட்டகுறை முடியுமென்பதற்குப்
பிரமாணம் ... ... "பூவாது பூத்து காயாது காய்த்து கனியாது
கனிந்துகசிந்துருகி பாராதவற்குப்பலியாத நானும் பகர்ந்திடவே
என்றதனால் காண்க. அண்டத்திற்கொத்தபொருள் பிண்டத்திற்
கண்டு கொள்ளலாம். பிண்டத்திற் கொத்தபொருள் அண்டத்
திற் கண்டுகொள்ளலாம் என்கிற கருத்தின் பிரகாரம் சரியை
கிரியை யோகம் ஞானம் மோக்ஷபதவி வியாச்சியத்தைக் குறித்து
முதலாவது ஸ்தூல சூக்ஷும காரண சீர டவுன் மாஜிஸ்ட்ரேட்
டாகிய மகா-ா-ஸ்ரீ ஹிருதயகமல பிள்ளையாகிய அவர்களிடத்தி
ல்பிராது சொல்லிக்கொண்டேன். அவர் பிரதிவாதி பக்ஷத்தில்
லஞ்சம் பெற்றுக்கொண்டபடியால் முற்காலத்தில் நாங்கள் உட
ந்தையான பாகஸ்தரென்று இக்காலத்தில் எங்கள் இரண்டு
பேருக்கும் எதோ ஓர் வாக்குத்தத்தமான விரோதம் நேரிட்டிரு
க்கிறதாக ஒரு தஸ்தாவேஜு உண்டுபண்ணி தவபாக்கியமாக
சிவவாக்கியம் சொல்லியபடி—

" வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழும்
தச்சில்லாத மாளிகை உனக்கு சமைந்தவாறு
அதெர்கனே " என்று கேட்டார்.

உன்னுக்குள் அறிந்தால் உடல் பொருள் ஆவி தெரியுப்
னன். தன்னுக்குள்ளிருக்கும் சந்தேகம் தெரியாமல் வஞ்
மான நெஞ்சகத்தையுடைய சூதடி யெடுத்து மோசடி செய்
பொருட்டு " நீ இப்போது என்னிடம் கொண்டுவந்திருக்கு
பிராது அகாதமான விகாதகட்சி மாச்சரியமென்று எதிரிக
ளுடைய கேஸை விடுதலை செய்திருக்கிறேன் " என்ருர். அவ்வ
மான சம்மதப் பத்திரிக்கை கேட்டதற்கு நீ இன்னும் நல்ல நம்
பிக்கையான தும்பிக்கையானைத் தொழுதால் கிடைக்குமென்ற
சந்நதியைப் பற்றி இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டாகிய
அகோர கெர்வித பிரசண்ட மாருத கோபாக்கினிப்பிள்ளை அவர்
களிடத்தில் பிராது சொல்லிக்கொண்டேன். அவர் யாதொரு
விசாரணையுமின்றி சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்
கிராணம் எனும் ஜயில் சூப்பிரண்டைக் கூப்பிட்டு பவரோக
சாகரத்தில் எமது தூதர் தண்டிக்கும் காவல் கிடங்கில் இருக்
கும்படி கட்டளையிட்ட கர்மானுபவத்தை யொழித்த நிர்மாண
ஜபத்தை ஜபித்தும் உர்ப்பவத் துதித்த கற்பனையின்படி மூன்
ருவது அஞ்ஞானத்தை விடுத்து மெஞ்ஞானத்தைப் படைத்த
அறிவானந்தம் பிள்ளை அவர்களிடத்தில் பிராது சொல்லிக்
கொண்டேன்.

அவர் அன்புக் கிசைந்த இன்பக்கனிரஸவாய் திறந்து இரு
வாதிகளையும் அழைப்பித்து வாக்குமூலங்களை வாங்கி.—

1. பிரம்மதேவ வேளான்
2. விஷ்ணுராஜன்
3. ருத்ரலிங்கம் பிள்ளை
4. மகேஸ்வர சீமான்
5 சதாசிவ முதலியார்
6. சதுர்வேதநாயகம்

7. அருமறைப் புதல்வன்

8. சத்துருவுக்கு சங்காரமும் மித்துருவுக்கு சகாய சய்யானின்ற ஷண்முகநாதன் ஆக எட்டு சாக்ஷிகளையும் ந்து சட்டதிட்டத்துடன் 96-வது சட்ட 3-வது பிரிவு காரணம் 1-வது விதியின்படி ஷை காமராஜன் வகையரு பர்வழிகளை குற்றவாளியென்று தண்டித்ததற்கு உடனே xtract (எக்ஸ்ட்ராக்ட்) முதலான ஸாங்ஷன் (sanction) பெ றுக்கொண்டு இனியிப்படி செய்யாமலிருக்கும்படி சதர்மேல் கார்ட்டாராகிய சிற்றம்பலம்பிள்ளை அவர்களிடத்தில் அப்பி சய்துகொண்டேன்.

இந்த மகாவீர சௌந்தர கம்பீர சம்பன்ன மாக்ஷிமைதங் கிய புண்ணிய புருஷோத்தமன் அனுதரக்ஷக விநோத புஷ்பக அங்க சிங்கார செங்கதிரலங்கார அலங்க கொத்தளத்தின் அக லக்கரைமேலிருக்கும் சுரங்கப் பொய்கையில் துலங்குகின்ற ஆலயத்தில் அடிநடு முடியான அம்பலச்சாவடியில் முன்புறக் கோர்ட்டினில் சல்லாபமாகிய உல்லாசமேவிய பத்மாசனத்தில் ஏகாந்த வைபோக திவ்யானந்த சேவைசெய்துக் கொண்டிருக் கிறபடியால் எள்ளளவுங் கவனித்து விசாரணை செய்யாமல் இல்லற துறவற இகபரஸாதன சுத்தகிரய பத்திரங்களை நீ இது பரியந்தம் திரிகரண சுத்தி செய்யாமலிருப்பதைப்பற்றி உனக்கு வெட்டவெளி யானதொரு பொட்டலிலே மூன்றத்தொரு பாகம் யோக்கியமான போக்கியமென்று உத்தரவு செய்திருக்கிறார்.

ஆகையால் சகல உலகத்துக்கும் நியாயாதிபதியாய் விளங் கும் சர்வஜீவ தயாபரக்கடவுள் அவர்கள்—— சுத்தப் பிரீதியா ன இந்தமனுவை சித்தப் பிரியமாக வாசித்துப் பார்த்து செம் ண்மையாய் விசாரணை செய்து எனக்கு நியாயங் கிடைக்கும்படி தீர்ப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுபம்.

ஸ்ரீ/ஞானப்பிராது முற்றிற்று.

# விளம்பரம்.

---

இந்த புஸ்தகம் வேண்டியவர்கள் தலை புஸ்தக ஷாப் ஷண்முக விலாசில் பெற்றுக் கொள்ளலாம்.

உங்களுக்கு போட்டோ எடுக்கவேண்டுமானல் குளித்தலை எஸ். மணி அன்கோவில் போட்டோ பிடியுங்கள் மாகயிருக்கும்.